REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 17 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 88 இல. 273 | November 17,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன் இணைந்து வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்

25GB ரூபா. 150/-
+ வரிகள்

செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#

*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிளேட்போம்களுக்கு மட்டுமே

TRC/M/Promo/20/02

Sri Lanka Telecom Mobitel

## புலமைப்பரிசில் பரீட்சை

# 10 மாணவர்களுக்கு இருநூறு புள்ளிகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிலுக்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதிகூடிய புள்ளியான 200 புள்ளிகளை நாட்டில் 10 மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் கடந்த ஒக்டோபர் 11ம் திகதி நடைபெற்றதுடன் 3 லட்சத்து 26 ஆயிரத்து 264 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

6 மாணவர்களும் 4 மாணவிகளும் நாடளாவிய ரீதியில் 200 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தியடைந்துள்ளனர்.

அதற்கிணங்க மருதானை சாஹிரா கல்லூரி மாணவன் பர்ஷான் மொகமட், எம்பிலிப்பிட்டி 06



கொழும்பு, புறக்கோட்டை நேற்று வெறிச்சோடி இருந்ததை படத்தில் காணலாம். படம் விமல் கருணாதிலக்க

## பதவியேற்று ஓராண்டு பூர்த்தி

# ஜனாதிபதி விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்



ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டு ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் அது தொடர்பிலான விழாக்கள் எதனையும் நடத்த வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி ஓராண்டு பூர்த்தியாகின்றது. இந்நிலையில், தமக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புவோர் எவ்வித நிகழ்வுகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும், வீண் செலவுகளை செய்ய வேண்டாம் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். 06

# 2021 வரவு-செலவு ...
# இன்று பாராளுமன்...




## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் பி.ப. 1.40க்கு சமர்ப்பிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

2021ஆம் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த ஒக்டோபர் 06ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பின்னர், ஒக்டோபர் 20ஆம் திகதி பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதமரும், நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவினால் 2021 நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு முன்வைக்கப்படவிருப்பதால் பாராளுமன்றம் இன்று



(17) பிற்பகல் 1.40 மணிக்கு கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்படும் இந்த வரவு செலவுத்திட்டம் இந்நாட்டின் 75வது வரவுசெலவுத்திட்ட அறிக்கையாகும். 2021ஆம் நிதி ஆண்டிற்காக 2678 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்கும், இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ 2900 பில்லியன் ரூபா வரையறைக்கு உட்பட்டதாகக் கடன்களைத் திரட்டுவதற்காகவும் ஒதுக்கீட்டுச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்.

கொரோனா தொற்று காரணமாக விசேட சுகாதார 06

# ...க்கர் காடழிப்பு ...விரோதமானது

## ... நீதிமன்றம் தீர்ப்பு

வில்பத்து சரணாலயத்தை அண்மித்த கல்லாறு பகுதியில் 1000 ஏக்கர் காட்டினை அழித்தமை சட்டவிரோதமானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் முழுப் பகுதியையும் மறுகட்டமைக்க தனிப்பட்ட நிதியைப் பயன்படுத்தவும் ரிஷாட் பதியுதீனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வில்பத்து சரணாலயத்தை அண்மித்த கல்லாறு பகுதியில் 1000 ஏக்கர் காட்டினை அழித்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்தும் நோக்கில் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிராக சுற்றாடல் நீதிக்கான நிலையம் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

குறித்த வழக்கின் பிரதிவாதிகளாக முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வன பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.



### தனது சொந்த செலவில் அழிக்கப்பட்ட காட்டை செழிப்புற மீளமைக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவு

வில்பத்து சரணாலயத்தின் கல்லாறு வனப் பகுதியில் 2388 ஏக்கரை அழித்ததன் ஊடாக பாரிய சூழல் அழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த வனப்பகுதியை மேலும் அழித்து மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற குடியேற்றங்களைத் தடுப்பதற்கான தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி சுற்றாடல் நீதிக்கான நிலையம் மனுவை தாக்கல் செய்திருந்தது.

# தனிமைப்படுத்தல் பகுதிகளில் வாகனங்களுக்கு கடும் கட்டுப்பாடு

## கோட்டை, புறக்கோட்டை பகுதிகளுக்கு விசேட ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணத்தில் மேலும் 24 பொலிஸ் நிர்வாகப் பிரிவுகளில் நேற்று அதிகாலை முதல் தனிமைப் படுத்தலுக்கான முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்



மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு வரும் வாகனங்களும் கொழும்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள 06

# மினுவாங்கொடை கொத்தணி தற்போது பூரண கட்டுப்பாட்டில்

## இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

மினுவாங்கொடை கொத்தணி தற்போது முற்று முழுதாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை கொத்தணியில் வைரஸ் தொற்றுள்ளவர்களாக கண்டறியப்பட்ட



3106 பேரில் தற்போது 136 நோயாளிகளே மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதாக அவர் தெரிவித்தார்.

கொவிட்19 இரண்டாவது அலை கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி மினுவாங்கொடையில் ஆரம்பித்த போது அதை 3106 நோயாளிகளாக மட்டுப்படுத்த 06

# பாடசாலைகளை திங்களன்று திறப்பதா? இல்லையா?

## சுகாதார அதிகாரிகளுடன் கல்வி அமைச்சர் பேச்சு

மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை எதிர்வரும் திங்கட்கிழமை திறப்பதா, இல்லையா என்பது குறித்து சுகாதார தரப்பினருடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.



பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைபரிசில் பரீட்சை பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது. 06

# அரவிந்தகுமார், டயனாவுக்கு

# 14 நாட்களில் திடீரென

# இரு மலையக மாணவர்கள்